# பகுதி – 5

## நிதி ஆதார ஒதுக்கீட்டு முறை சுருக்கம்

# பிரிவு – 1

**முன்னுரை:**

1. நிதி ஆதார ஒதுக்கீட்டு ஏற்பாடு பற்றி ஆராய்ந்த , இந்த ஆணையம், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் மாநில அரசின் தற்போதைய நிதி நிலைமையின் சில முக்கியமான அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளது. குடிமைப் பணிகள் மன நிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டுமாயின் ஊராட்சிகள், ஏனைய உள்ளாட்சி மன்றங்கள் போன்ற அடிமட்ட அமைப்புகளின் நிதி நிலையையும் நிருவாக அமைப்பையும் வலுப்படுத்தல் வேண்டும்.

ஆணையம் இதனை, தேவையின் கண்ணோட்டத்தில், அதாவது தற்போது நிறைவு செய்யப்பட்டு வரும் மக்களின் தேவைகள் அவர்களுடைய பெருகி வரும் எதிர்பார்ப்புகள் காரணமாக இனி வருங்காலத்தில், எழக் கூடிய தேவைகள், ஆகியவற்றை நிறைவு செய்வதான கண்ணோட்டத்தில், இப்பிரச்சினையை அணுகியுள்ளது. பின்வரும் ஆறு முக்கியக் குடிமைப் பணிகளுக்கான வரைமுறைகள் மற்றும் தர அளவைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன:–

(i) குடிநீர்
(ii) சாலைகள்
(iii) விளக்கு வசதி
(iv) துப்புரவு, கழிவு நீரகற்றல்
(v) கழிவுகள் அகற்றல்
(vi) வெள்ள நீர் வடிகால்

இந்த ஆறு முக்கிய குடிமைப் பணிகள் தொடர்பாக இயக்க பராமரிப்புச் செலவு வகையில் ஏற்படக் கூடிய நிதிப் பொறுப்புகள் கணக்கிடப்பட்டு, நிதிப் பற்றாக்குறையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பற்றாக்குறை பின்வரும் 3 நிதி ஆதாரங்களிலிருந்து நிரப்பப்பட வேண்டும்::–

(i) உள்ளாட்சி மன்றங்களின் சொந்த நிதி ஆதாரங்கள்
(ii) ஒப்படைகள் வகையில் மாநில அரசு செய்யும் நிதி ஒதுக்கீடு
(iii) மத்திய அரசின் நிதியுதவி

2. உள்ளாட்சி மன்றங்கள் தங்களின் பணிகளை நிறைவேற்ற உதவியாக மாநில அரசும் மத்திய அரசும் மானியங்கள், வருவாயில் பங்கு, ஆகிய வழிகளில் தேவையான நிதியுதவியளித்து இப்பற்றாக்குறையை/ நிரப்ப முன் வரவேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. இனிமேல் உள்ளாட்சி மன்றங்கள், மாநில அரசுக்கு அடுத்த நிலையில் ஒரு புதிய அரசாக உருவெடுக்கும். இதனையே வேறு விதமாகச் சொல்வதானால், உள்ளாட்சி மன்றங்களுக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய அரசியலமைப்புச் சட்டப் பூர்வ அந்தஸ்தும், சட்டப்படிக்கான பொறுப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே, உயர் நிலைகளிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்களை மாற்றுவதற்கு நன்கு ஆராய்ந்து வடிவமைக்கப்பட்ட விரிவான திட்டம் ஒன்று வேண்டும்.

இது தொடர்பாக, மாநில நிதி ஆணையம் பின்வரும் அம்சங்களைப் பரிசீலித்தது:–

(i) வரி ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்தல், சொத்துக்களைத் தக்கவாறு மதிப்பிட்டு, வரி விதித்தல், மேல் முறையீடு செய்வதற்கான நடைமுறையை எளிமைப்படுத்தல் , குடியிருப்பு, மற்றும் வணிகச் சொத்துக்கள், சொத்துவரியின் கூறுகள் ஆகியவற்றுக்கான வரி வீதங்களைத் திருத்தியமைத்தல், வசூல் நடவடிக்கைகளைச் செம்மையுறச் செயல்படுத்தல், சொத்து வரி விதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்ட இனங்களை தீர ஆய்வு செய்தல், உள்ளாட்சி மன்ற ஏனைய வரி வீதங்களைத் திருத்தியமைத்தல், பயனீட்டாளர் கட்டணங்களை உரிய அளவில் விதித்தல் ஆகிய பணிகள், உள்ளாட்சி மன்றங்களின் சொந்த நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும்.

(ii) உள்ளாட்சி மன்றங்களின் வசூல் திறமைக்கு ஏற்ப அவற்றுக்கு கூடுதல் வரிகளை ஒப்படை செய்தலும் ஆயத் தீர்வை, விற்பனை வரி, மோட்டார் வாகன வரி முதலான சில வளர் தன்மை கொணட நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுத்தல் ஆகியவற்றால் உள்ளாட்சி மன்றங்களின் வருமானம் அதிகரிக்கும்.

(iii) வரி வசூல் திறன், மக்கள் தொகை, செலவுத் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு கணக்கு முறை மூலம் நிதி ஆதாரங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும். மானியப் பகிர்வுக் கொள்கை செலவு சமன்பாட்டுக் கோட்பாட்டை நிறைவு செய்வதாய் இருத்தல் வேண்டும். அதாவது உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து நிதி அந்தஸ்தையும் பணி அளவுகளையும் சமன்படுத்தும் வகையில், இந்த நிதி ஆதார மாற்றங்கள் இருக்க வேண்டும்.

(iv) பணியின் தன்மையையும், வகையையும் பொறுத்து, அரசு சாரா அமைப்புகள் பணிகளைத் திறமையான முறையில் குறைந்த செலவில் செய்து முடிக்க இயலுமானால், அப்பணிகளை தனியார் மயமாக்குவதற்கான சாத்தியம் பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

வரி விதிப்புப் பற்றாக்குறை பிரச்சினைக்கு பின்வரும் நான்கு வெவ்வேறு வழிகளில் கொள்கையளவில், தீர்வு காணலாம்.

a) உள்ளூர் வரி விதிப்பு முயற்சிகளை அதிகரித்தல்
b) உள்ளூர் வரி விதிப்பு அதிகாரத்தை அதிகரித்தல்
c) அரசின் உயர்நிலைகளிலிருந்து பெறப்படும் நிதிகளை அதிகரித்தல்
d) உள்ளூர் செலவு அதிகாரத்தைக் குறைத்தல்

## பிரிவு – 2

மாநிலத்தின் நிதி நிலை பற்றி விவரிக்கிறது. மாநில அரசு அளித்துள்ள புள்ளி விவரங்களின்படி 1997–98 முதல் 2001–2002 வரையிலான 5 ஆண்டுகளில் கிடைக்கும் வருவாய் பற்றிய ஒரு முன் மதிப்பீடு இதில் அடங்கியுள்ளது.

## பிரிவு – 3

கிராமப் பகுதி மற்றும் நகர்ப்பகுதியைச் சேர்ந்த வெவ்வேறு வகை உள்ளாட்சி மன்றங்களின் தற்போதைய நிதி நிலையை விவரிக்கிறது.

## பிரிவு – 4

உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பான வரி வருவாய் மதிப்பீடுகள் மற்றும் நிதி ஆதாரப் பற்றாக்குறை பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது. அவசியத் தேவை அளவுகளின் அடிப்படையிலும் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவு வகையிலான நிதிப் பொறுப்புகளின் அடிப்படையிலும் நிதி ஆதாரப் பற்றாக்குறை கணக்கிடப்பட்டுள்ளது.

## பிரிவு – 5

அரசு நிதி ஒப்படைப்பு

**3.** ஒரு சிறந்த வலுவான நிதி ஆதார ஒதுக்கீட்டு ஏற்பாடு பின்வரும் நோக்கங்களை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும். (5.5.4)

i) திறமை
ii) நடுநிலை
iii) வளர்ச்சி
iv) சுயாட்சி

**4.** மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கு, நிதி ஆதார ஒதுக்கீட்டு ஏற்பாட்டமைப்பு பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் அமையப் பெறுதல் வேண்டும். [பத்தி 5.5.5]

i) எளிமை
ii) ஒளிவு மறைவற்ற தன்மை
iii) செயல்திறம்
iv) தன் முனைப்பு
v) முன்கூட்டி தெரிவித்தல்

**5.** இந்த அறிக்கையின் பகுதி 2இல் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள், மாநிலத்தின் பல்வேறு வருவாயின் ஆதாரங்களிலிருந்து பிரித்துக் கொடுத்தலை நோக்கமாகக் கொண்டவை. இக்கருத்துரைகள், நிதி ஆதாரப் பிரிவினை குறித்த மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளுக்கு அடிப்படையாக அமையும். அந்தப் பரிந்துரைகள் குறிப்பிட்ட வரிகளிலிருந்து ஒப்படை செய்ய வேண்டியவற்றை நோக்கமாய் கொண்டது. இருப்பினும், அரசின் வரிகளிலிருந்து ஒட்டு மொத்தமான A, B என்ற தொகுப்பில் குறிப்பிட்ட அளவுகள் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன. மொத்த வரித்தொகையின் பங்கினை வழங்க இசைவு ஏற்படவில்லையாயின், தனித்தனியாக குறிபபிடட வரிகளில் பங்கு கொடுக்கும் நிலை ஏற்படும். (5.5.18)

**I. தொகுப்பு 'A'** – உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக ஒதுக்கப்பட்டு, ஆனால் அரசால் வசூலிக்கப்படுகின்ற வரிகள் இதில் அடங்கும். இத் தொகுப்பில், சேர்க்கப்பட்ட இனங்கள், 1997–98 ஆம் ஆண்டுக்கான வருமான முன்மதிப்பீடு ஆகியவை வருமாறு:–

குறிப்பு: : இனம் (c) I த் தவிர ஏனையவை, மாநில நிதி ஆணையத்திற்கு அரசினால் தெரிவிக்கப்பட்ட, மாநில மொத்த வரி வருவாய் புள்ளி விவரங்களில் சேர்க்கப்படவில்லை.

| | | 1997–98 ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடு (ரூபாய். கோடியில்) |
|---|---|---|
| a) | முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல் வரி (இது குறித்துக் கலந்தாலோசித்த போது, பத்திரப் பதிவுத் துறை குறிப்பிட்ட 1995–96ஆம் ஆண்டிற்கான கணக் குகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டவை) | 230.00 |
| b) | உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி 1990ல் தாமோதரன் குழு கணக்கிட்ட அடிப்படை நில வரிகளின்படி (ரூ. 5.30 கோடி) | 30.00 |
| c) | கேளிக்கைவரி, (மாநில நிதி ஆணையம் பரிந்துரை செய்கின்ற 90 சதவீத ஒப்படையை அடிப்படையாகக் கொண்டது. | 120.00 |
| | மொத்தம் | 380.00 |

**II தொகுப்பு 'B'** :இது மாநிலத்தின் நிகர வரி வருவாயிலிந்து உள்ளாட்சி மன்றங்களுக்குச் பகிர்ந்து கொள்ளக்கூடிய பொதுவான வரி மாற்றங்களுக்கு மையக் கருவாக அமைகிறது. சில தீர்வைகள், வரிகள் குறித்து மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள பங்குகளையும் மற்ற வரிகளையும் கணக்கில் எடுத்து, 1997–98 ஆம் ஆண்டிற்கான, அவற்றின் தொடர்புடைய மதிப்பீட்டு அளவுகளையும் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| a) | விற்பனை வரி | |
| b) | மோட்டார் வாகன வரி | 620.00 |
| c) | மாநில ஆயத் தீர்வை வருவாய் | |
| d) | மற்ற வரிகள் | |
| | மொத்தம் | 1000.00 |
| | 1997–98 ஆம் ஆண்டிற்கான, மாநிலத்தின் மொத்த வரி வருவாய் மதிப்பீடு | 7867.00 |

A தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள கேளிக்கை வரியின் தொகையைக் கழித்தால், அரசின் மொத்த வா வருவாய் ரூ.7747 கோடியாகும். இதில் B தொகுப்பில் உள்ள தொகை 8 விழுக்காடு ஆகும். (5.5.18)

உள்ளாட்சி மன்றங்களின் கூடுதல் வரி, மற்றும் வரியல்லாத ஏனைய வருவாய்களையும் மிஞ்சி ஏற்படுகின்ற பற்றாக்குறையை இட்டு நிரப்ப வேண்டியதின் அவசியம் பற்றி, தனிப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் வரி விதிப்பு மற்றும் பற்றாக்குறையை ஒட்டி ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டுள்ளது. 5.25 முதல் 5.31 வரையிலான அட்டவணைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒட்டு மொத்தப் பற்றாக்குறையானது, தனிப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் நிலையைப் பிரதிப்பலிப்பதாக இல்லை. உண்மையான பற்றாக்குறை நிலையையொட்டி,. சில உள்ளாட்சி மன்றங்களின் மாதிரிகளைப் பரிசீலனை செய்த பிறகு, மாநில நிதி ஆணையம், மாநிலத்தின் நிகர வரி வருவாயிலிருந்து, 1997 முதல் 2002 வரையிலான 5 ஆண்டுகளுக்கு, பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அளவை நிர்ணயம் செய்துள்ளது. (5.5.19)

பகிர்வு முறை: [பத்தி 5.5.21]

மாநில அரசின் நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்யப்பட்ட அளவு அரசின் நிதிநிலையில் பகிர்வு செய்யக்கூடிய அளவை கருத்தில் கொண்டது. முதல் ஆண்டிலேயே திடீரென அதிக அளவில் பகிர்ந்தளிக்கப்படும் நிதிகளை உள்ளாட்சி மன்றங்களால் முறையாகப் பயன்படுத்த இயலுமா என்ற கருத்தும் ஆராயப்பட்டது. அளிக்கப்படுகின்ற நிதிகளை நிருவகிப்பதற்கு உள்ளாட்சி மன்றங்கள் தங்களை தாங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமாதலால் இந்தச் சூழ்நிலையில், நிதிப் பகிர்வை, படிப்படியாக, பல்வேறு கட்டங்களில் அளிக்கலாமா என்பது குறித்து மாநில நிதி ஆணையம் பரிசீலித்து இலக்காகக் கொண்ட அளவை ஐந்தாவது ஆண்டில், அதாவது 2001–02 ஆண்டில் அடையலாம் என்று கருதுகிறது. அதன்படி, நிதிப் பகிர்வு அளவினை கீழ்க்கண்டவாறு ஆண்டுதோறும் அதிகரிக்கும் முறையல் நிர்ணயிக்கிறது.

| | |
|---|---|
| 1997 – 1998 | 8% |
| 1998 –1999 | 9% |
| 1999 – 2000 | 10% |
| 2000 –2001 | 11% |
| 2001 – 2002 | 12% |

பகிர்வுமுறைப் பங்கிலிருந்து தனி நிதி: [பத்தி 5.5.22]

மாநில நிதி ஆணையம், வெவ்வேறு உள்ளாட்சி மன்றங்களின் அடுக்குகளுக்கு மேற்கண்ட 8, 9, 10, 11 மற்றும் 12 விழுக்காடு நிதிப் பகிர்வை ஒதுக்கீடு செய்வது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், நிதிப் பகிர்வுக்குப் பின் எழக்கூடிய நிலைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் 15 விழுக்காடு தனி நிதி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கருதுகிறது.

(1) புதிதாகத் தெரிவிக்கப்பட்ட பங்கீட்டுக் கோட்பாடுகளை செயற்படுத்துகையில் ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளைச் நிறைவு செய்யவும்

(2) உள்ளூர் நிதி வசூல் முயற்சிகளை ஊக்குவிக்கும் அதாவது, ஊரக உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்க அதாவது, வீட்டு வரி இணை மானியம், உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியம் ஆகியவற்றை தற்போது அளிக்கப்படுகின்ற ஊக்க மானியத்தைத் தொடர்ந்து அளிப்பதற்காகவும் ஊக்க நிதியாகவும் இந்த தனிநிதி பயன்படுத்தப்படலாம். அதிலிருந்து ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் கூடுதல் வரிவசூல் செயவதற்கு வரும் தீர்வுகள் அளிக்கவும் ஒரு பங்கு பயன்படுத்தலாம் .

9. ஊரக, நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களிடையே பிரித்தளிக்கப்பட வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்யும்போது, சமன்பாட்டு நிதிக்கும் ஊக்க நிதிக்கும் குறிப்பிட்ட ஒரு சதவீதத் தொகையை ஒதுக்கி வைப்பது உகந்தது என்று கருதப்படுகிறது. நிதி பிரித்தளிக்கப்பட்ட பின்னர் திருப்தியற்ற பாதிக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் நிதி ஏற்றத் தாழ்வை சீர் செய்வதே சமன்பாட்டு நிதியின் நோக்கமாகும். ஊரக உள்ளாட்சி மன்றங்களில் அதாவது ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் ஊராட்சிகளில் வரி முயற்சிகளை அதிகரிப்பதற்காக உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியம், வீட்டு வரி இணை மானியம் மூலம் அளிக்கப்படுகின்றன. தற்போதைய ஊக்க உதவிகளை தொடர்ந்து அளிப்பதே ஊக்க நிதியின் நோக்கமாகும். அரசு வகுக்கும் விரிவான ஒரு திட்டத்தின் அடிப்படையில் சிறந்த உள்ளாட்சி மன்றம், சிறந்த தலைவர், சிறந்த பணியாளர் ஆகியோருக்கு வெகுமதி அளிப்பதற்கு ஊக்க நிதியின் ஒரு பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

10. மொத்த ஒதுக்கீட்டிலிருந்து 15 விழுக்காடு சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதிக்கு ஒதுக்கப்படலாம். எஞ்சியுள்ள 85 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளுக்கிடையேயும் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களின் அடுக்குகளுக்கிடையேயும் மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த பகிர்வு முறையின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படலாம். சிறப்பு நிதி மாநில அளவில் பராமரிக்கப்பட்டு வரலாம்.

11. முந்திய பத்தியில் குறிப்பிடப்பட்ட எஞ்சிய 85 விழுக்காடு இதன் பின்னர் விவாதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கேற்ப மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நேரடியாகவும் ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயும் (Vertical and Horizontal) பகிர்வு செய்யப்படும். இக் கோட்பாடுகள், சார்புத் துறைகளுடனும் மாநிலத் திட்டக் குழுவுடன் விரிவாக விவாதித்த பின்னர் வகுக்கப்பட்டவையாகும்.

பகிர்வு முறை:

12. மாநில நிதி ஆணையத்திற்கான ஆய்வு வரம்புகளின்படி, மாநில அரசு மற்றும் நகர்ப் பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையில் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதை நெறிப்படுத்தக் கூடிய கோட்பாடுகளைப் பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு பகிர்ந்தளிக்கும் போது பின்வரும் கூறுகளை (aspects) மனதில் கொள்ளப் பட்டது.

(1) வருவாய்க் கணக்கில் மட்டுமே அதாவது, இயக்கம் மற்றும் பராமரிப்புக்கு மட்டுமே நிதி ஆதாரங்கள் மாற்றப்படும்.

(2) உள்ளாட்சி மன்றங்கள் முக்கியக் குடிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மட்டும் நிதி ஆதாரங்களை பயன்படுத்த வேண்டும்.

(3) உள்ளாட்சி மன்றங்களின் 31.3.94 வரையிலான உள்ளாட்சி நிதி நிலை மதிப்பிடப்பட்டு 1997 ஏப்ரலில் தொடங்கும் 5 ஆண்டு காலத்திற்குப் பயன்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

**மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயும் நிதிப் பகிர்வு முறை**

13. மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் போது இரண்டு மேலிருந்து கீழ் பங்கீட்டு முறையும் ஒரு அடுக்கு முறையாகும்.

மாநில அரசிடமிருந்து

| | | |
|---|---|---|
| நிலை I<br>(மேலிருந்து கீழ் முறை) | (i)<br>(ii) | ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும்<br>நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கும்<br>மாற்றுவதற்காக மொத்த நிதி ஒதுக்கீடு செய்தல் |
| நிலை II<br>(மேலிருந்து கீழ் முறை) | | ஊரக/நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட (மாநில அரசின் ஒதுக்கீடுகளை, ஊரக உள்ளாட்சி அமைப்பின்கீழ் வருகின்ற உள்ளாட்சி மன்றங்களுக்கு – மாவட்டப் பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கும், நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கும் அடுக்கு வாரியாக பகிர்ந்தளித்தல். |
| நிலை III<br>(அடுக்கு முறை) | | அந்தந்த அடுக்குகளுக்கான நிதி ஒதுக்கீட்டை (ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி அடுக்கில் வரும் உள்ளாட்சி மன்றங்களிடையே அதாவது மன்றங்களுக்கியையான பகிர்வு) ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டப் பஞ்சாயத்து ஆகியவற்றுக்கிடையேயும்மற்றும் பேரூராட்சிகள் /நகராட்சிகள் மாநகராட்சிகள் ஆகியவற்றுக் கிடையேயும் பகிர்ந்து அளித்தல். |

14. மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு, பொருத்தமான நிலைகளுக்குச் செய்யப்பட வேண்டிய நிதி மாற்றங்களை முடிவு செய்ய பின்பற்றப்படும் கோட்பாடுகள்:

(i) எளிமையானவையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.
(ii) இருக்கின்ற அதிகாரப் பூர்வமான தகவல்களின் அடிப்படையிலானவையாக இருக்க வேண்டும்.
(iii) நியாயமானவைபாகவும் நடுநிலைமையானவையாகவும் இருத்தல் வேண்டும்.

மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிகளை மாற்றுவதற்கு வகுக்கப்பட்ட கோட்பாடுகள் வருமாறு:

## நிலை I : மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுதல். (மேலிருந்து கீழ்முறை)

15. நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளின் அளவு மற்றும் நடுநிலை கண்ணோட்டத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகளை ஒதுக்க, மக்கள் தொகை அடிப்படையிலான கணக்கு முறை, பொதுவாக, நல்ல அடிப்படை என ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, மாநில அரசிடமிருந்து ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிகள் மாற்றப்படுவது கடைசியாக எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இருக்கும். எனவே, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயான பகிர்வு விகிதாச்சாரம் 60:40 என்ற அடிப்படையில் இருக்கும்.

நிலை II: ஊரகப் பகுதி (மாநில அரசிடமிருந்து ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்வு) (மேலிருந்து கீழ்முறை)

ஊரகப் பொதுத் தொகுப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வெவ்வேறு அடுக்குகளுக்கு, அதாவது

1. மாவட்ட பஞ்சாயத்துக்கள்
2. ஊராட்சி ஒன்றியங்கள்
3. ஊராட்சிகள் ஆகியவற்றுக்கான பகிர்வு ஏற்பாடு பின்வருமாறு இருக்கும்.

**i. மாவட்ட பஞ்சாயத்துகள்**

மாவட்ட பஞ்சாயத்து என்பது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு முறையாகும். மாவட்ட அமைப்பும் அலுவல்களும் இன்னும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. எனினும் ஊரக பொது தொகுப்புக்குரிய மொத்த நிதி ஒதுக்கத்திலிருந்து, அதன் தேவைகளை நிறைவு செய்யும் அளவிற்கு தற்போது ஒட்டு மொத்த மானியம் வழங்கப் பரிந்துரைக்கப்படுகிறது. அது ஊரக பொதுத் தொகுப்பில் 14 விழுக்காடாக நிர்ணயிக்கப்படடுள்ளது.

**ii. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள்**

சம்பந்தப்பட்ட அமைப்புகளின் எண்ணிக்கை அவற்றின் பணிகள், குடிமைப் பணிகளின் தன்மை மற்றும் அளவு, அப்பணிகளை நிறைவேற்ற அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கிடையேயான விகிதாச்சாரம் மாவட்ட பஞ்சாயத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையை நீக்கி மீதமுள்ள தொகையில், 50:50 என்ற அடிப்படையில் இருக்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

**நிலை III (A) ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையேயான பகிர்வு: (அடுக்கு முறை)**

| | | |
|---|---|---|
| (1) | ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த மக்கட் தொகை | 50 விழக்காடு |
| (2) | பட்டியல் சாதியினரில், பட்டியல் பழங்குடியினரின் மக்கள்தொகை | 25 விழுக்காடு |
| (3) | ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வலிமை மாவட்ட பிற்பட்ட நிலை ( சராசரி தனி நபர் நில வரி வருவாய் – அடிப்படையில்) | 25 விழுக்காடு |
| | மொத்தம் | 100 விழுக்காடு |

15. ஊராட்சி ஒன்றியங்களில் முக்கியமான பயன் பெறும் கூறு, மக்கள் தொகை என்பதால் நிதிப் பகிர்வு முறையில் மக்கள் தொகை சார்ந்த கூறுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்படும் அளவு 50 சதவீதமாகும். எஞ்சிய 50 சதவீதம், மற்றைய ஆதாரத்திற்கு ஒதுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சராசரி தனி நபர் நில வரி வருவாயை அடிப்படையாகக் கொண்டு நிதி வகையில் தனித்தியங்கும் தன்மைக்கு, 25 சதவீதமும் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினரின் மக்கள்தொகை அடிப்படைக்கு 25 சதவீதமும் ஒதுக்கப்படுகிறது. நிதிவகையீடு தலைகீழ் விகிதாச்சார அடிப்படையிலான ஒதுக்கீடாகும். அதாவது, தனி நபர் நிலவரி வருவாய் அதிகமுள்ள (நிதி வலிமை கூறு) ஊராட்சி ஒன்றியங்களுக்கு குறைவான நிதியும், தனி நபர் நில வரி வருவாய் குறைவாகவுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதியும் ஒதுக்கப்படும். சில ஒன்றியங்களுக்கு வரக்கூடிய நிதியுதவி கணக்கிடப்பட்டு எடுத்துக்காட்டுகளோடு இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

**16.** ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி தனி நபர் நில வரி வருவாய் அடிப்படையில், அவை வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த அளவு கோல் உள்ளாட்சி மன்றங்களின் நிதி வலிமையைக் குறிப்பிடும் குறியீடாக அமைகிறது. உயர் நிலையைச் சேர்நத ஊராட்சி ஒன்றியங்களுக்கு குறைந்த அளவிலும், மிக உயரிய நிலையைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மிகக் குறைவாகவும் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படலாம். கீழ்நிலையைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படலாம். இதனால், இந்த வகையின் கீழ் வருகின்ற உள்ளாட்சி மன்றங்கள் இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு தங்களின் வருவாய்ப் பற்றாக் குறையை ஈடு செய்யலாம்.

**17.** ஊராட்சிகளுக்காக செய்யப்படும் ஒதுக்கீடுகள், அவற்றுக்கிடையே பின்வருமாறு பகிர்நது கொள்ளப்படும்:–

**நிலை III (B) ஊராட்சிகளிடையே நிதிப் பங்கீடு:**

| | | |
|---|---|---|
| (1) | கடைசியாக எடுக்கப்பட்ட (1991ல்) மக்கள் தொகை கணக்கின்படியான | 50 விழுக்காடு |
| (2) | பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினரின் மக்கள் தொகை (கடைசியாக 1991ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) | 15 விழுக்காடு |
| | துணை மொத்தம் | 65 விழுக்காடு |
| (3) | தனி நபர் வீட்டு வரி வசூல் | 15 விழுக்காடு |
| (4) | முக்கிய குடிமைப் பணிகள் தொடர்பான அடிப்படை வசதி பராமரிப்புப் பணியில் பற்றாக்குறை | 20விழுக்காடு |
| | மொத்தம் | 100 விழுக்காடு |

பின்குறிப்பு: ஒரு சில ஊராட்சிகளுக்கு உரிய நிதியுதவி கணக்கிடப்பட்டு, ஊராட்சிகளுக்கான கணக்குமுறை வகுக்கப்பட்டு அதன் எடுத்துக்காட்டுகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**நகர்ப்பகுதி ஒதுக்கீடுகளின் பங்கீட்டு கோட்பாடுகள் வருமாறு:–**

18. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் (மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு)

நிலை I : (மேலிருந்து கீழ்)

ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின், மக்கள் தொகை (மாநில அரசிடமிருந்து விகிதாச்சார அடிப்படையில் அதாவது, 60:40 என்றஅடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு) மாநில அரசிடமிருந்து ஊரக, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்தல்.

நிலை II : (மேலிருந்து கீழ்)

நகர்ப்பகுதி தொகுப்பிலிருந்து வெவ்வேறு அடுக்குகளுக்கு நிதிகள் (மாநில அரசிடமிருந்து பகிர்ந்தளிக்கப் படுகின்றன. உள்ளாட்சி மன்றங்களுக்கு)

1. பேரூராட்சிகள்
2. நகராட்சிகள் மற்றும்
3. மாநகராட்சிகள்

**19.** மாநில நிதி நகர்ப்புற மொத்த ஒதுக்கீடு 1991 மக்கட்தொகை அடிப்படை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்பட பரிந்துரைக்கப்படுகிறது. (5.6.18)

| | | சதவீதம் |
|---|---|---|
| 1. | பேரூராட்சிகள் | 38 |
| 2. | நகராட்சிகள் | 31 |
| 3. | மாநகராட்சிகள் | 31 |

**நிலை III :**
**(அடுக்குமுறை)**

பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே (ஒரே அடுக்கைச் சேர்ந்த நிதி பகிர்வு – உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு)

**20.** உள்ளாட்சி மன்றங்களின் அந்தந்த அடுக்குக்குரிய தொகையை பிரித்துக் கொடுக்கத் தக்க தொகுப்பிலிருந்து தொகையைப் பகிர்ந்தளிப்பதற்கு, பின்வரும் மதிப்பு கோட்பாடு பின்பற்றப்படும். (5.6.19)

| | | பேரூராட்சிகள் | நகராட்சிகள் | மாநகராட்சிகள் விழுக்காடுகள் |
|---|---|---|---|---|
| 1. | மொத்த மக்கள் தொகை (கடைசிக் கணக்கெடுப்பின்படி அதாவது 1991 ஆம் ஆண்டு) | 45 | 45 | 40 |
| 2. | பட்டியல் சாதியினரின்/ பட்டியல் பழங்குடியினரின் மொத்த மக்கள் தொகை | 20 | 10 | 10 |
| 3. | நிதி நிலைக் குறியீடு சொந்த நிதி ஆதாரங்களிலின் தனி நபர் வருவாய் (31.3.94ஆம் நாளன்றுடன் முடிவடைந்த கடைசி மூன்றாண்டுகளுக்கான வரி மற்றும் வரியல்லாத வருவாய் ஆதாரங்களின் சராசரி) | 15 | 15 | 15 |
| 4. | பணிக் குறியீடு (முக்கிய குடிமைப் பணிகள் குறித்த தற்போதைய ) தனி நபர் செலவு | 20 | 30 | 35 |
| | மொத்தம் | 100 | 100 | 100 |

பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கான பங்கீட்டு கணக்கு முறை வகுக்கப்பட்டு, சில எடுத்துக்காட்டுகள் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

21. அறிக்கையின் முக்கியப் பகுதி

**தொகுப்பு A**: இத்தொகுப்பில் உள்ளாட்சி மன்றங்களுக்கென ஒதுக்கப்பட்டு, ஆனால் அரசால் வசூலிக்கப்படுகின்ற வரிகள் அடங்கும். எனினும், இதில் கேளிக்கை வரி தவிர ஏனையவை அரசு வழங்கியுள்ள மாநில வரிகளின் முன்மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. இந்நிதி உள்ளாட்சி மன்றங்களுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும்.

| | | 1997–98 ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அ) | முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி | 230.00 |
| ஆ) | உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ்மேல் வரி | 30.00 |
| இ) | கேளிக்கை வரி | 120.00 |
| | மொத்தம் | **380.00** |

**தொகுப்பு B**: இது, இத் தொகுப்பு (A) இல் இடம்பெற்றுள்ள கேளிக்கை வரி நீங்கலாக ஏனைய மாநில வரிகள் அடங்கிய பொதுப் பங்கீட்டு நிதித் தொகுப்பாகும். (DivisiblePool)

| | | 1997–98 ஆம் ஆண்டுக்கான முன்மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| அ) | விற்பனை வரி | |
| ஆ) | மோட்டார் வரி | |
| இ) | மாநில ஆயத்தீர்வை | → 620.00 |
| ஈ) | ஏனையவை அனைத்தும் | |

பொதுப்பங்கீட்டு
நிதித் தொகுப்பு:– (இது பொதுப் பங்கீட்டு நிதித் தொகுப்பில் 8 சதவிகித அளவிற்கானதாகும்).

1997–98 ஆம் ஆண்டுக்கான மாநில மொத்த வரி வருவாய் முன்மதிப்பீடு (projected) ரூ.7367 கோடியில் கேளிக்கை வரி ரூ. 120 கோடி நீங்கலாக எஞ்சியது ரூ.7747 கோடி.

படிப்படியாக அதிகரிக்கும் வீதத்திலான நிதி: பகிர்வு தொகுப்பு **B**:

| | | | |
|---|---|---|---|
| 1997–1998 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 8 விழுக்காடு |
| 1998–1999 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 9 விழுக்காடு |
| 1999–2000 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 10 விழுக்காடு |
| 2000–2001 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 11 விழுக்காடு |
| 2001–2002 | – | மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் | 12 விழுக்காடு |

**நிதிப் பகிர்வு கொள்கை: (B தொகுப்பிலிருந்து மட்டும்)**

| | |
|---|---|
| மொத்தம் | 100 விழுக்காடு |
| மாநில சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதிக்காக | 15 விழுக்காடு |
| **பொதுப்பங்கீட்டு நிதித் தொகுப்பு** | **75 விழுக்காடு** |

| | 85 சதவீதத்தில் | 100 சதவீதத்தில் |
|---|---|---|
| **ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்கள்** | 51 | 60 |
| மாவட்டப் பஞ்சாயத்து | 7 | 8 |
| ஊராட்சி ஒன்றியம் | 22 | 26 |
| ஊராட்சி | 22 | 26 |
| **நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள்** | 34 | 40 |
| மாநகராட்சி | 10.5 | 12.5 |
| நகராட்சிகள் | 10.5 | 12.5 |
| பேரூராட்சிகள் | 13 | 15 |

நிதி ஒப்படை முறை:

அரசு நிதி ஒப்படையை கீழ்க்கண்டவாறு மூன்று தவணைகளில் வழங்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் தவணை | – | ஏப்ரல் | – | மே மாதம் | 25 விழுக்காடு |
| இரண்டாவது தவணை | – | ஆகஸ்ட் | – | செப்டம்பர் மாதம் | 50 விழுக்காடு |
| மூன்றாவது தவணை | – | ஜனவரி | – | பிப்ரவரி மாதம் | 25 விழுக்காடு |

கணக்குப்படி ஒப்படை வேண்டியதற்கும் ஏற்கனவே ஒப்படை செய்ததற்கும் உள்ள பாக்கியை பின்வரும் ஆண்டுகளில் முதல் தவணையுடன் சேர்த்து ஒப்படை செய்யவேண்டும்.

முலதன நிதி:

23. பத்தாம் நிதிக் குழுவின் ஒதுக்கீடும், நிதி உபரியாக உள்ள உள்ளாட்சி மன்றங்கள் செய்யும் முதலீடுகளும் சேர்ந்து முக்கிய நிதியாகும். இதில் எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் பங்கீடு செய்ய வேணடும். மாநில அரசும் இதற்கு ஈடு செய்ய நிதி வழங்க வேண்டும். இதன்பேரில் மூலதன நிதிக்காக பொதுச்சந்தையில் கடன் பெறுவதன் முலம் நிதியைத் திரட்டலாம். உள்ளாட்சி மன்றங்கள் அந்நிதியிலிருந்து தங்களின் பங்கு கொண்ட முறைப்படி உதவி பெற்றுக் கொள்ளலாம்.

மாநில அரசு கூடுதலாக அளிக்கும் நிதிப் பகிர்வுகள்:[பத்தி 5.6.21]

| | | |
|---|---|---|
| 1993–94 (கணக்குகள்) | – | ரூ 341.5 கோடி |
| 19996–97 (திருத்திய மதிப்பீடு) | – | ரூ.556.90 கோடி |
| 1997–98 (மாநில நிதி பரிந்துரை) | – | ரூ.1000 கோடி |
| முந்தைய ஆண்டைவிட உயர்வின் சதவீதம் | – | 80 விழுக்காடு |

1997–98 முதல் 2001 – 02 வரைக்கான இந்த நிதிப் பகிர்வின் நிலையை விளக்கும் ஒரு படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டபடியிலான பகிர்வுமுறை செயலாக்கப்பட்டபின், தனிப்பட்ட வரிகளின் அடிப்படையிலோ அல்லது குறிப்பிட்ட அல்லது குறிப்பீடு இல்லாத மானியங்களோ வழங்குவது தேவைப்படாது. இருப்பினும், இந்தப் பரிந்துரைகள் தற்போதுள்ள பராமரிப்பு நிலையைக் கணக்கில் கொண்டவை என்பதை விளக்குவது அவசியம். இனி வருங்காலத்தில் ஒப்படை செய்யக்கூடிய பணிகளுக்கும் புதிதாக ஏற்படுத்தக்கூடிய அடிப்படை குடிமைப் பணிகளுக்கும் தேவைப்படும் நிதி தனியாக கவனிக்கப்படவேண்டும். அவை இந்த நிதிப்பகிர்வு பரிந்துரைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில், இந்த ஆண்டுதோறும் வழங்கப்படும் பகிர்வுமுறை தற்போதுள்ள சொத்துக்களின்/பணிகளுக்கு பணவீக்கத்தினால் ஏற்படும் கூடுதல் தேவையை மட்டும் கணக்கில் கொண்டது.

### உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதிப் பகிர்வைக் காட்டும் விவர அறிக்கை

(ரூபாய் கோடியில்)

| | சொந்த வருவாய் | உள்ளூர் ஆதார நிதித் தொகுப்பு-A | பொதுப்பங்கீட்டு தொகுப்பு-B (உள்ளாட்சி மன்றங்களுக்கு) 85%) | மாநில சேமநிதி சமன்பாட்டு நிதி மற்றும் ஊக்க நிதி தொகுப்பு - Bயில் 15 ரூபாய்) | மொத்தம் | உத்தேச மொத்தம் | நிகர நிலைமை செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1997-1998 | 518.05 | 380.00 | 527.00 | 93.00 | 1518.05 | 1472.50 | 45.55 |
| 1998-1999 | 556.19 | 410.40 | 655.68 | 115.71 | 1737.98 | 1619.74 | 118.24 |
| 1999-2000 | 655.97 | 448.23 | 805.56 | 142.34 | 2053.10 | 1781.34 | 271.76 |
| 2000-2001 | 723.87 | 478.69 | 931.17 | 164.32 | 2298.05 | 1959.92 | 338.13 |
| 2001-2002 | 800.48 | 516.99 | 1066.21 | 188.15 | 2571.77 | 2156.10 | 415.67 |